PRGI (RNI) No : TNTAM/2023/88599

# திரை மொழி

THIRAI MOZHI

TAMIL MONTHLY தமிழ் மாத இதழ்

| | | | | |
|---|---|---|---|---|
| திரை : 04 | மொழி : 02 | செப்டம்பர் - 2026 | பக்கம்: 8 | விலை : ரூ.25 |
| Volume : 04 | Issue : 02 | September - 2026 | Page: 8 | Price : Rs.25 |





கடந்த 23.08.2026 அன்று சென்னை இணையக் கல்விக் கழகத்தில் நடைபெற்ற தமிழ் மரபு அறக்கட்டளை வெள்ளி விழா நிறைவு நிகழ்ச்சியில் தமிழ்நாடு சட்டமன்ற சபாநாயகர் மாண்புமிகு ஜே.சி.டி. பிரபாகர் அவர்கள் வெளியிடத் தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் மாண்புமிகு ராஜ்மோகன் அவர்கள் மற்றும் தகவல் தொடர்புதுறை அமைச்சர் மாண்புமிகு குமார் அவர்கள் ஆகியோர் பெற்றுக்கொள்ளத் தனிநாயகன் ஆவணப்பட முன்னோட்டம் வெளியிடப்பட்டது.

# தமிழ்த்தூதர் தனிநாயகம் : தனிநாயகன்

## இயக்குநர் பிருந்தா சாரதியின் ஆவணப்படம்

சென்ற ஆண்டு கவிக்கோ ஆவணப்படத்தை இயக்கிய கவிஞர் பிருந்தா சாரதி அவர்கள் இவ்வாண்டு தமிழ்த்தூதர் தனிநாயகம் அடிகளார் குறித்த ஆவண படத்தை இயக்கி யிருக்கிறார். அவரைச் சந்தித்து உரையாடியதில் இருந்து....

தமிழுக்குப் பல்வேறு விதங்களில் தொண்டு செய்த அறிஞர்தனிநாயகம் அடிகளார். தமிழ் என்பது ஒரு மாநில மொழி அல்ல... அது உலகச் சிந்தனை கொண்ட உலகப் பொது மொழி



சுபாஷிணி

என்பதை உலகுக்கு அறிவித்த பேரறிஞர். அறிவித்ததோடு மட்டுமின்றி அதைச் செயலாக்கம் செய்தவரும் அவர்தான்.



உலகம் முழுவதும் இருக்கின்ற தமிழ் அறிஞர்களைக் கூட்டி உலகத் தமிழ் மன்றம் என்ற ஓர் அமைப்பை உருவாக்கி உலகத் தமிழ் மாநாடு என்ற கருத்தாக்கத்தை விதைத்து முதல் உலகத் தமிழ் மாநாட்டை மலேசியா நாட்டின் கோலாலம்பூரில் நடத்தியவர். அதைத் தொடர்ந்து தமிழ் ஆய்வுகள் பன்னாட்டு மொழிகளில் நடைபெறக் காரணமானவர்

உலகமெங்கும் பரவிய தமிழரின் தடங்கள் பல்வேறு நாடுகளில் இருப்பதைக் கண்டறிந்து அதை ஆவணப் படுத்தியவர்.

50க்கும் மேற்பட்ட உலக நாடுகளுக்குப் பயணம் செய்து தமிழின் பெருமைகளை எல்லா நாடுகளிலும் பரப்பியவர்.

பன்னாட்டு மொழிகளைக் கற்று அம்மொழிகளிலேயே அம்மக்களுக்குத் தமிழ் இலக்கியம், பண்பாடு, வரலாறு ஆகியவற்றைக் கொண்டுசென்றவர்.

முதலில் அச்சான தமிழ் நூல்கள் ஐரோப்பிய நூலகங்களில் இருப்பதைக் கண்டறிந்து மீண்டும் அச்சிட்டு அச்சுத் தமிழுக்கு அணி சேர்த்தவர்.

உலகப் பல்கலைக்கழகங்கள் பலவற்றில் தமிழ் இருக்கைகள் உருவாகக் காரணமாக அமைந்தவர்.

தமிழ் கல்ச்சர் எனும் ஆங்கில ஆய்விதழைத் தொடங்கி நடத்தியவர். 200க்கும் மேற்பட்ட தமிழ் இலக்கியப் பண்பாட்டுக் கட்டுரைகளை ஆங்கிலத்தில் எழுதி உலகின் கவனத்தைத் தமிழின் மீது திருப்பித் தமிழுக்குச் செம்மொழி அந்தஸ்து கிடைக்க உழைத்த அறிஞர்களில் ஒருவர்.

> பக்கம் 2ல் தொடரும்



பிருந்தா சாரதி



தமிழ் தூது, ஒன்றே உலகம், சங்க இலக்கியத்தில் இயற்கை, பழந்தமிழ் இலக்கியத்தில் கல்வி சிந்தனைகள், திருவள்ளுவர்... முதலிய ஆழமான தமிழ் ஆய்வு நூல்களின் ஆசிரியர்.

தமிழ் ஆய்வுப் புலங்களில் ஒப்பிலக்கியத்துறை என்ற ஒன்று உருவாக காரணமான முன்னோடி.

இப்படிப் பன்முகம் கொண்ட பேரறிஞர் தனிநாயகம் அடிகளார்.

தமிழன் மறந்த பெருமைகளில் தனிநாயகமும் ஒன்றாகச் சேர்ந்து விடக்கூடாது என்ற அக்கறையின் காரணமாகத் தமிழ் மரபு அறக்கட்டளை தன்னுடைய வெள்ளிவிழா ஆண்டைத் தனி நாயகம் ஆண்டாகக் கொண்டாட முடிவெடுத்து சென்ற ஆண்டு முழுக்க பள்ளிகள், கல்லூரிகள், இலக்கிய அரங்குகள் பலவற்றில் தனிநாயகரின் பெருமைகளைக் கூட்டங்கள் பல நடத்தி திசையெங்கும் ஒலிக்கச் செய்தது.

அதன் ஒரு பகுதியாகத் தனிநாயகம் அடிகள் குறித்த ஆவணப்படம் ஒன்றையும் உருவாக்கத் திட்டமிட்டு அதை இயக்கும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார் அறக்கட்டளையின் நிறுவனர் முனைவர் க. சுபாஷிணி. பல்வேறு ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தும் பணிகளில் ஈடுபட்டிருக்கும் சுபாஷிணி அவர்களுக்குத் தனிநாயகம் அடிகளார் ஓர் உந்து சக்தி என்பதை அவரோடு உரையாடும்போது உணர்ந்தேன்.

கடந்த ஆண்டு முழுக்கத் தனிநாயகம் அடிகள் பற்றி பல்வேறு நூல்களை படித்து அறிந்து குறிப்பெடுத்து, பல்வேறு அறிஞர்களிடம் நேர்காணல் கண்டு இந்த ஆவணப்படத்தை உருவாக்கி இருக்கிறோம்.




பல்கலைக்கழகத் துணைவேந்தர், தமிழறிஞர்கள் எனப் பலர் இந்த ஆவணப்படத்தில் தனி நாயகம் அடிகளார் குறித்த தங்கள் கருத்துக்களைப் பதிவு செய்திருக்கிறார்கள்.

மாலை தென்னிந்தியத் திரைப்பட நடிகர் சங்கத் தலைவர் நாசர் அவர்கள் ஆவணப்படத்தை முழுமையாக வெளியிட்டு வாழ்த்துரை யாற்றினார்.

உலகளாவிய சிந்தனை கொண்ட தனிநாயகம் அடிகளார் இப்போது உலக இணையவெளியில் வலம் வருகிறார்.

தனிநாயகன் ஆவணப்படம் யூ ட்யூபில் தற்போது நடிகர் நாசர் அவர்கள் பின்னணிக் குரலில் ஒளிபரப்பாகிறது.

அமைச்சர் மாண்புமிகு ராஜ்மோகன் அவர்கள் பேசும்போது, தனிநாயகம் அடிகளார் ஆவணப்படத்தை எழுதி இயக்கியதன் மூலம் மகத்தான பணி ஒன்றை செய்திருக்கிறார் சகோதரர் பிருந்தா சாரதி. ஒரு தமிழ் மாணவராகத் தன் வாழ்நாள் கடமை ஒன்றை அவர் செய்து முடித்திருக்கிறார். இது அவரை உயரத்தில் கொண்டு சென்று அமர்த்தும்." என்று பாராட்டியது கடந்த ஓராண்டாக இந்த பணியை ஏற்று செய்ததற்குக் கிடைத்த வெகுமதியாக நினைக்கிறேன்.

பல அறிஞர்கள் சேர்ந்து பல்லாண்டுகள் ஆற்ற வேண்டிய பணிகளைத் தனி ஒருவராகச் செய்த தனிநாயகம் அடிகளாரை சில மணித்துளிகள் அதாவது, 40 நிமிடங்கள் ஒதுக்கி நாமும் அறிந்து கொள்வோம்.






திரை மொழி நான்காம் ஆண்டு மாத இதழை தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கத்தில் தலைவர் ஆர்.கே.செல்வமணி, துணைத்தலைவர்கள் பி.வாசு, பொதுச்செயலாளர் ஆர்.வி.உதயகுமார், பொருளாளர் பேரரசு, இயக்குநர் ரவிமரியா மற்றும் இயக்குநர்கள், செயற்குழு உறுப்பினர்களிடம் திரைமொழி ஆசிரியர் ஆர்.சுப்ரமணியபாரதி, பொறுப்பாசிரியர் என்.மூர்த்தி, கௌரவ ஆசிரியர் குரு அரங்கதுரை ஆகியோர் வழங்கினார்கள்.

# உலக கவனத்தை ஈர்த்த ‘ONE MAN’

“நல்ல படைப்புக்கு நம்மால் முடிந்த பங்களிப்பு!!” என்ற கருத்தை மையமாகக் கொண்டு டிஸ்கவரி புக் பேலஸ் மற்றும் திரைமொழி மாத இதழ் சார்பில், திரைப்பட இயக்குநரும் தயாரிப்பாளரு மான சங்ககிரி ராஜ்குமார் இயக்கியுள்ள ‘ONE MAN’ திரைப்படத்தின் சிறப்புத் திரையிடல் மற்றும் இயக்குநருடனான நேரடி கலந்துரையாடல் நிகழ்ச்சி 14 செப்டம்பர் 2026, திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு, சென்னை டிஸ்கவரி புக் பேலஸில் உள்ள பிரபஞ்சன் அரங்கில் நடைபெற்றது.






திரைப்படத் திரையிடலைத் தொடர்ந்து, இயக்குநர் சங்ககிரி ராஜ்குமார், வாசகர்கள் மற்றும் திரைப்பட ஆர்வலர்களுடன் திரைப்பட உருவாக்கம், அதன் பின்னணியில் உள்ள முயற்சிகள் மற்றும் தனது படைப்புப் பயணம் குறித்து நேரடியாகக் கலந்துரையாடினார்.

வித்தியாசமான மற்றும் துணிச்சலான படைப்பாற்றல் முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் நோக்கில், நிகழ்ச்சியில் பங்கேற்கும் பார்வையாளர்கள் தங்களால் இயன்ற அளவில் பங்களிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. நிகழ்ச்சியில் கிடைத்த தொகை முழுவதும் இயக்குநர் சங்ககிரி ராஜ்குமாரிடம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சி, திரைப்படம் மற்றும் படைப்பாளிகளுக்கான வாசகர் சமூகத்தின் ஆதரவை வெளிப்படுத்தும் ஒரு சிறப்பு முயற்சியாக அமைந்தது.

சினிமாவே லாபத்தை நோக்கமாகக் கொண்ட வணிகம் தான் என்றாலும் அதிலும் ஒரு நேர்மை அவசியம். குடும்பத்தோடு பார்க்கத்தக்க வகையில் ஜனரஞ்சகமாக கொடுத்தாலும் ஊடாக ஒரு மெசேஜ் கொடுப்பதுதான் ஷங்கர் பாணியாகும். அதுவே சரியாகும். ஆனால் கேளிக்கை என்ற பெயரில் கொச்சைத்தனமாக படமெடுத்து மக்கள் ரசனையை கெடுப்பது பிற்போக்குத்தன மாகும். இவைகளிலிருந்து மாறுபட்டு தமிழ் சினிமாவின் தரத்தை உயர்த்தி, உலக சினிமாக்களோடு போட்டி போடும் பரிட்சார்த்த முயற்சிகளும் நடக்கின்றன. விஷப்பரீட்சையென தெரிந்தே இச்சவாலை ஏற்பவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். அந்த வகையில் சமீபத்தில் அசத்தியவர் ONE MAN பட இயக்குநர் சங்ககிரி ராஜ்குமார். நவராத்திரி சிவாஜி, தசாவதாரம் கமல், அஷ்டவாதானி டி.ராஜேந்தரின் மொத்த உருவாக சினிமாவுக்கே உரிய அனைத்து துறைகளையும் தனி ஒருவனாக ஏற்று தொழிலில்நுட்ப வளர்ச்சியுடன், எளிமையான தயாரிப்பில் பிரம்மாண்டமான படைப்பாக ஒன் மேன் படத்தை கொடுத்திருக்கிறார்.

20 மொழிகளில் சப் டைட்டில் செய்யப்பட்டுள்ள ஒன் மேன் படத்தின் மேக்கிங் வீடியோ படத்தின் முடிவில் காட்டப்படுகிறது. அதுவே இப்படத்தின் ஆச்சரியமான முயற்சிக்கு சாட்சியாகும்.

உலக சினிமாவில் யாரும் யோசிக்காத, இப்படைப்பில் கதை, திரைக்கதை, வசனம், இயக்கம், இசை, எடிட்டிங், ஒளிப்பதிவு, சண்டை, நடனம், மேக்கப் என்று எத்தனை துறைகள் உண்டோ, அத்தனையையும் தன்னந்தனியாக தானே செய்து, ஒன் மேன் படத்தை உருவாக்கி இருக்கிறார், சங்ககிரி ராஜ்குமார்.

அது மட்டுமா! படத்தில் எத்தனை கேரக்டர்கள் உண்டோ அத்தனையிலும் அவரே நடிக்கிறார். ஹீரோ, ஹீரோவின் மூன்று நண்பர்கள், ஹீரோயின் அம்மா, போலீஸ், தீவிரவாதி என்று.....

ஒரு காட்சியில் தியேட்டரில் படம் பார்க்கும் கார் மெக்கானிக் கேரக்டரும் அவரே என்றால் அந்த தியேட்டரில் படம் பார்க்கும் நூறு பேரும் அவராகவே இருக்கிறார். நம்ப முடிகிறதா!

ஆப்பிரிக்காவில் ஒரு டாக்ஸிக்குள் பயணிக்கும் நான்கு கேரக்டர்கள் குறித்த வித்தியாசமான டாக்ஸி என்ற படத்தை அந்நாட்டு அரசே தத்து எடுத்து கேன்ஸ் உட்பட அனைத்து உலக பட விழாக்களிலும் திரையிடுகிறது. அந்தந்த நாடுகளில் ஸ்டால் அமைத்து அரசே வரும் விருந்தினர்களிடம் பிரச்சாரம் செய்கிறது. இதுபோல நமது மத்திய, மாநில அரசுகளும் முன்னெடுத்தால் ஒன் மேன் போன்ற படங்களும் உலக பார்வைக்கு செல்லும்.

தமிழ் சினிமா செழிக்கும். நடக்குமா?

**அண்ணா அன்பழகன்**

அலைபேசி: 9342202834.

# 2026-ல் சிறந்த படத்துக்கான 'ஆஸ்கார்' விருது 'One Battle After Another'

*One Battle After Another* ஒரு அதிரடி திரைப்படம் போலத் தொடங்கினாலும், அதன் உள்ளே ஒரு தந்தை–மகள் உறவு, பழைய அரசியல் போராட்டங்களின் விளைவுகள், அதிகாரம், பயம், குடும்பம், கடந்த காலத்திலிருந்து தப்பிக்க முடியாத நிலை போன்ற பல விஷயங்களை இப்படம் பேசுகிறது.

*Thomas Pynchon* எழுதிய *Vineland* நாவல் தழுவி எடுக்கப்பட்ட படம். 2026 *Academy Awards*ல் படம் *Best Picture, Best Director, Best Adapted Screenplay, Film Editing, Casting, Best Supporting Actor* உள்ளிட்ட முக்கிய விருதுகளை வென்றது.

இயக்கம் மற்றும் திரைக்கதை: *Paul Thomas Anderson*

வெளியான ஆண்டு: 2025

வகை: அரசியல் பின்னணி கொண்ட *Action / Drama / Dark Comedy*

முக்கிய நடிகர்கள்: *Leonardo DiCaprio, Sean Penn, Benicio del Toro, Teyana Taylor, Chase Infiniti, Regina Hall*

இசை: *Jonny Greenwood*

ஒளிப்பதிவு: *Michael Bauman*

*Editing: Andy Jurgensen*




கதை: அகதிகளுக்கும் இந்த உலகத்தில் வாழ உரிமை இருக்கிறது என்ற கொள்கை உடைய பிரெஞ்ச் 75 என்ற புரட்சி குழு, அதில் இருப்பவன் *Bob Ferguson* அந்த குழுவுடன் இணைத்து அதிகார வர்க்கத்துக்கு எதிராக போராடுகிறான். அரசாங்க அமைப்புகளுக்கும் அதிகாரத்திற்கும் எதிராக செயல்படும் அந்தக் குழுவில் கறுப்பின *Perfidia Beverly Hills* என்ற பெண்ணும் இருக்கிறாள். *Bob*க்கும் *Perfidia*வுக்கும் காதல் உருவாகிறது. இருவருடைய வாழ்க்கையும் அமைதியான குடும்ப வாழ்க்கையாக இல்லாமல் போராட்டம், துப்பாக்கி, வெடிகுண்டு, போலீஸ் துரத்தல் என்று ஆபத்தான பாதையில் செல்கிறது.

அதே நேரத்தில் *Colonel Steven J. Lockjaw* என்ற அதிகாரி அவர்களின் வாழ்க்கைக்குள் வருகிறான். அவன் அதிகாரம், இனவெறி, போன்ற எண்ணங்களை கொண்டவன். *Perfidia*வுடன் அவனுக்கு ஒரு தவிர்க்க முடியாத சூழலில் ஏற்படும் தொடர்பு மூலம் கர்ப்பமாகிறாள், அது *Bob*ன் குடும்ப வாழ்க்கையையே பாதிக்கும் பெரிய பிரச்சினையாக மாறுகிறது, *Perfidia Beverly Hills* யை போலீஸ் கைது செய்கிறது அவள் சொல்வதை வைத்து மற்றவர்களை *Lockjaw* டீம் கொல்கிறது, புரட்சி இயக்கமும் சிதறி போகிறது. *Lockjaw*க்கு விருதும் கிடைக்கிறது, அவனிடம் இருந்து *Perfidia Beverly Hills* தப்பிக்கிறாள்,

பல வருடங்களுக்கு பிறகு *Bob* தனது பழைய அடையாளத்தை மறைத்துக்கொண்டு வாழ ஆரம்பிக்கிறான். அவனுடன் மகள் *Willa* வளர்கிறாள். இப்போது *Bob* ஒரு வீரமான புரட்சிக்காரன் போல இல்லை. பல வருடங்கள் ஓடி விட்டதால் அவன் போதைப்பொருள் பழக்கம், பயம், சந்தேகம், கடந்தகால நினைவுகள் என்று குழப்பமான மனிதனாக வாழ்கிறான். ஆனால் அவனுக்கு மிகவும் முக்கியம் மகள் *Willa* பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பது மட்டும் தான்,

*Willa*வோ தனது தந்தையைப் போல இல்லை. அவள் இளம் பெண். தன்னைப் பாதுகாத்துக்கொள்ளும் திறனும் இருக்கிறதுஎன்று நினைக்கிறாள். தந்தை எதற்காக எப்போதும் பயந்து கொண்டிருக்கிறார் என்று புரியாமல் இருக்கிறாள், காரணம் அவருடைய கடந்தகாலத்தில் என்ன நடந்தது என்பதெல்லாம் அவளுக்கு முழுமையாகத் தெரியாது. *Bob* கடந்த காலத்தை மறந்து விட்டான், ஆனால் அந்த கடந்தகாலம் மீண்டும் அவர்களைத் தேடி வருகிறது.

பல ஆண்டுகளுக்குப் பிறகு *Lockjaw* மீண்டும் தேடி வருகிறான். அதிகாரம் மிக்க ரகசிய அமைப்பின் உறுப்பினராக இணைய கறுப்பின பெண்ணின் தொடர்பை மறைக்க நினைக்கிறான், இதுவரை மறைந்து வாழ்ந்த *Bob*க்கு இது நெருக்கடி கொடுக்கிறது

இங்கிருந்து படம் ஒரு பெரிய துரத்தல் கதையாக மாறுகிறது. *Bob* தனது மகளை கண்டுபிடித்து காப்பாற்ற வேண்டும். ஆனால் பழைய *revolutionary network* முன்பு இருந்தபடி இல்லை. பழைய நண்பர்கள் பல இடங்களில் சிதறி வாழ்கிறார்கள். *Bob*க்கும் வயதாகிவிட்டது. ஒரு காலத்தில் தெரிந்திருந்த ரகசிய *code words* கூட அவனுக்கு சரியாக நினைவுக்கு வருவதில்லை. இதை படம் நகைச்சுவையாகவும் காட்டுகிறது. ஒருகாலத்தில் அமைப்புகளுக்கு எதிராகப் போராடிய மனிதன் இப்போது ஒரு *telephone conversation*ஐக்கூட சரியாக நடத்த முடியாமல் தடுமாறுகிறான்.

*Bob*க்கு உதவும் முக்கியமான மனிதர்களில் ஒருவர் *Sergio St. Carlos. (Benicio del Toro)* நடிக்கும் இந்தக் கதாபாத்திரம் அமைதியானவராகத் தோன்றினாலும் தேவையான நேரத்தில் மற்றவர்களுக்கு உதவும் மனிதர். *Bob* பதற்றத்தில் ஓடிக்கொண்டிருக்கும்போது *Sergio* போன்றவர்கள் மூலம் இன்னும் ஒரு *underground community* உயிருடன் இருப்பதை அறிகிறான், அதே நேரம் *Willa*வை ஒரு *community* காப்பாற்றுகிறது

*Lockjaw*வின் பிரச்சினையும் பெரிதாகிறது. அவன் தொடர்புடைய வெள்ளை இன மேலாதிக்க ரகசிய அமைப்புக்குள் அவனுடைய கடந்தகால உறவுகள் தெரியவந்தால் அவனுக்கே ஆபத்து வருகிறது. அதனால் *Willa* அவனுக்கு ஒரு உயிருள்ள சாட்சியாக மாறுகிறாள். தன்னைப் பாதுகாப்பதற்காக அவளை அழிக்க வேண்டிய நிலைக்கு அவன் செல்கிறான்.

*Lockjaw* மற்றும் அதிகார அமைப்பிடம் இருந்து தன் மகளை காப்பாற்ற போராடினாலும், இங்கே *Paul Thomas Anderson* வழக்கமான *action* திரைப்படம் போல "ஒரு *hero* எல்லோரையும் அடித்து வீழ்த்துகிறார்" என்று காட்டவில்லை. யார் எங்கே இருக்கிறார்கள், அடுத்த மலைக்கு அப்பால் யார் வருகிறார்கள் என்ற *uncertainty* மூலம் பதற்றத்தை உருவாக்குகிறார். *Bob* பல நேரங்களில் நிலைமையை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியாத தந்தையாகவே இருக்கிறான்.

இதனால் *Bob* தனது மகளை காப்பாற்ற ஓடுவது ஒரு தனிப்பட்ட குடும்பப் போராட்டமாக இருந்தாலும், அதன் பின்னால் பல வருடங்களாகத் தொடர்ந்து வந்த அரசியல் வெறுப்பு, இனவெறி, அதிகாரம் மற்றும் பழிவாங்குதல் ஆகியவை அடங்கி இருக்கிறது .

முடிவில் பகுதியில் பல கதாபாத்திரங்களின் பாதைகள் ஒன்றாகச் சந்திக்கின்றன. *Willa* தப்பிக்க முயற்சி செய்கிறாள். அவளைத் தொடர்ந்து எதிரிகள் வருகின்றனர். *Bob* தனது மகளை காப்பாற்ற முயற்சி செய்கிறான். நீண்ட சாலைகள், மலைப்பாதைகள் மற்றும் வேகமான வாகனங்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட *chase sequence* படத்தின் மிக முக்கியமான பகுதியாகிறது.

இறுதியில் *Lockjaw* உருவாக்கிய வன்முறை அவனையே சுற்றி வளைக்கிறது. அவன் தப்பிக்க நினைத்த உலகமும் அவன் சேர விரும்பிய வெள்ளை இன மேலாதிக்க அதிகார அமைப்பும் அவனுக்கு பாதுகாப்பான இடமாக மாறுவதில்லை. அவன் அதிகாரத்தைப் பாதுகாக்க செய்த செயல்கள் இறுதியில் அவனையே அழிவுக்கு அழைத்துச் செல்கின்றன.

*Willa* தனியாக போராடி தன்னை காத்து கொள்கிறாள், *Bob* இறுதியாக *Will* இருக்கும் இடத்துக்கு வருகிறான். அதுதான் படத்தின் உண்மையான வெற்றி.

*Willa* தனது தந்தையின் வாழ்க்கையை அப்படியே தொடரப் போவதில்லை. அவள் தனது சொந்த பாதையைத் தேர்ந்தெடுக்கத்



தொடங்குகிறாள். Bobன் தலைமுறை தொடங்கிய போராட்டங்கள் முடிந்துவிடவில்லை. அவை வேறு வடிவத்தில் அடுத்த தலைமுறைக்குச் செல்கின்றன.

இதனால்தான் படத்தின் பெயர் One Battle After Another—ஒரு போராட்டம் முடிந்தால் வாழ்க்கை முழுமையாக அமைதியாகி விடுவதில்லை இன்னொரு போராட்டமாக மாறுகிறது. Willa வும் அதில் இருக்கிறாள்.

**படத்தின் முக்கியமான விஷயம் – தந்தையும் மகளும்**

வெளியில் பார்த்தால் இது revolution, politics, guns, chase ஆகியவற்றைக் கொண்ட பெரிய action படம். ஆனால் அதன் உள்ளே இருப்பது மிகவும் எளிய கதை.

குழந்தையைப் பாதுகாப்பது மட்டும் பெற்றோரின் வேலை அல்ல; ஒரு கட்டத்தில் அவர்கள் தனியாக உலகத்திற்குள் செல்ல அனுமதிப்பதும் பெற்றோரின் கடமை.

**படத்தின் முக்கிய கருத்துகள்**

இந்தப் படம் முதலில் கடந்தகாலத்திலிருந்து முழுமையாக ஓடிவிட முடியாது என்று சொல்கிறது. Bob தனது பழைய revolutionary வாழ்க்கையை விட்டுவிட்டான். பெயர், இடம், வாழ்க்கை அனைத்தையும் மாற்றினாலும் அந்த காலத்தில் செய்த செயல்களின் விளைவுகள் பல வருடங்களுக்குப் பிறகும் திரும்பி வருகின்றன.

இரண்டாவது கருத்து அதிகாரம். Lockjawக்கு அதிகாரம் என்பது மற்றவர்களை கட்டுப்படுத்துவதற்கான கருவி. Bobன் பழைய revolutionary groupக்கு அதிகாரத்திற்கு எதிராகப் போராடுவது முக்கியம். ஆனால் படம் எந்தக் குழுவையும் முழுமையான நல்லவர்கள் என்று எளிதாக காட்டுவதில்லை. போராட்டத்தில் இருப்பவர்களுக்கும் தவறுகள், ego, வன்முறை இருக்கலாம் என்று காட்டுகிறது.

மூன்றாவது கருத்து தலைமுறை மாற்றம். Bobன் தலைமுறை ஒரு விதமாக போராடியது. Willaவின் தலைமுறை அதையே copy செய்ய வேண்டிய அவசியமில்லை. பெற்றோரின் அரசியல், தவறுகள், பயம் ஆகிய அனைத்தையும் குழந்தைகள் அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை. அவர்கள் தங்கள் சொந்த முடிவுகளை எடுக்கலாம்.

**நகைச்சுவை ஏன் இருக்கிறது?**

இவ்வளவு serious விஷயங்கள் இருந்தாலும் படம் பல இடங்களில் மிகவும் வேடிக்கையாக இருக்கும். குறிப்பாக Leonardo DiCaprioவின் Bob.

ஒருகாலத்தில் revolutionary.

இப்போது password மறக்கிறான்.

Code words மறக்கிறான்.

Phoneல் தடுமாறுகிறான்.

பயந்து ஓடுகிறான்.

இதன் மூலம் இயக்குநர் ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்கிறார். நாம் கடந்தகால heroes பற்றி நினைக்கும்போது அவர்கள் எப்போதும் அதே வீரத்துடன் இருப்பார்கள் என்று நினைக்கிறோம். ஆனால் உண்மையில் அவர்களுக்கும் வயதாகும். நினைவுகள் மங்கும். உடல் மாறும். உலகமும் மாறிவிடும்.

அதனால் Bob ஒரு traditional action hero அல்ல. வயதாகிவிட்ட, குழப்பமான, ஆனால் மகளை மிகவும் நேசிக்கும் மனிதன்.

**காட்சியமைப்பு**

Michael Baumanன் cinematography படத்திற்கு மிகப் பெரிய scale கொடுக்கிறது. குறிப்பாக சாலைகள் மற்றும் மலைப்பகுதிகளில் நடைபெறும் chase scenesல் road மேலே கீழே மறைந்து மீண்டும் தோன்றுவதால் யார் யாரைத் தொடர்ந்து வருகிறார்கள் என்பதைப் பற்றிய tension அதிகரிக்கிறது. 2026 Oscarsல் Michael Bauman Best Cinematography nomination பெற்றார்.

Andy Jurgensenன் editing action scenes வேகமாக இருந்தாலும் கதாபாத்திரங்களின் குழப்பத்தை நாம் புரிந்துகொள்ளும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இதற்காக அவர் Best Film Editing Oscar வென்றார்.

Jonny Greenwoodன் இசை பல காட்சிகளில் நிம்மதியைக் கொடுப்பதற்குப் பதிலாக பதற்றத்தை அதிகரிக்கிறது. அவரது scoreவும் Academy Awardக்கு nominated ஆனது.

**முக்கிய நடிகர்கள்**

Leonardo DiCaprio – Bob Ferguson: பழைய revolutionary; இப்போது Willaவைப் பாதுகாக்க முயலும் தந்தை. இந்த நடிப்புக்காக Best Actor Oscar nomination பெற்றார். Chase Infiniti – Willa: Bobன் மகள். கதையின் புதிய தலைமுறையை பிரதிநிதித்துவப்படுத்தும் முக்கியமான பாத்திரம்.

Sean Penn – Colonel Steven J. Lockjaw: அதிகாரம், வெறுப்பு மற்றும் கடந்தகாலத்தின் ஆபத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்மறைக் கதாபாத்திரம். இந்த நடிப்புக்காக Best Supporting Actor Oscar வென்றார்.

Benicio del Toro – Sergio St. Carlos: Bobக்கு உதவும் முக்கியமான மனிதர். Del Toroவும் Supporting Actor Oscar nomination பெற்றார்.

Teyana Taylor – Perfidia Beverly Hills: Bobன் கடந்தகாலத்தையும் Willaவின் குடும்ப வரலாற்றையும் இணைக்கும் முக்கியமான கதாபாத்திரம்; Taylor Supporting Actress Oscar nomination பெற்றார்.

Regina Hall: Bobன் பழைய revolutionary உலகத்துடன் தொடர்புடைய முக்கிய supporting character.

OSCAR மற்றும் BAFTA வெற்றிகள்

2026 Academy Awardsல் One Battle After Another மிகப் பெரிய வெற்றி பெற்றது.

Best Picture, Best Director, Best Adapted Screenplay, Best Supporting Actor, Best Film Editing, Best Casting ஆகிய ஆறு Oscars வென்றது

2026 BAFTA Awardsலும் படம் 6 விருதுகள் வென்றது; அதில் Best Film, Director மற்றும் Adapted Screenplay உள்ளிட்டவை அடங்கும்.

PAUL THOMAS ANDERSON – இயக்குநர்

Paul Thomas Anderson, பொதுவாக PTA என்று அழைக்கப்படும் அமெரிக்க இயக்குநர். மனிதர்களின் ஆசை, அதிகாரம், தனிமை, குடும்ப உறவுகள், obsession போன்றவற்றை ஆழமாக ஆராய்வது அவரது படங்களின் தனிச்சிறப்பு.

அவருடைய முக்கிய படங்களில் Boogie Nights (1997) – 1970/80களின் adultfilm industry பின்னணியில் fame மற்றும் family பற்றிய படம்; Magnolia (1999) – பல மனிதர்களின் வாழ்க்கைகள் ஒன்றுடன் ஒன்று இணையும் emotional drama; PunchDrunk Love (2002) – தனிமையான மனிதனின் விசித்திரமான காதல் கதை; There Will Be Blood (2007) – எண்ணெய், பணம், மதம், பேராசை பற்றிய மிக முக்கியமான படம்; The Master (2012) – போருக்குப் பிறகு மனநிலை பாதிக்கப்பட்ட மனிதனுக்கும் charismatic religious leaderக்கும் இடையேயான உறவு; Inherent Vice (2014) – Thomas Pynchon நாவலை அடிப்படையாகக் கொண்ட detective comedy; Phantom Thread (2017) – fashion designer மற்றும் அவரது காதலியின் சிக்கலான அதிகார உறவு; Licorice Pizza (2021) – இளமை, காதல், 1970களின் California; One Battle After Another (2025) – அரசியல் போராட்டத்துக்குள் தந்தை–மகள் உறவு ஆகியவை அடங்கும்.

2026 Academy Awardsல் One Battle After Another மூலம் Paul Thomas Anderson Best Director Oscar மற்றும் Best Adapted Screenplay Oscar வென்றார்.

**இயக்குநர் தளபதி பிரபு**
செல் : 86957 55555

PRGI (RNI) No : TNTAM/2023/88599
திரை மொழி
TAMIL MONTHLY தமிழ் மாத இதழ்
THIRAI MOZHI

நிறுவனர்/ஆசிரியர் : R. சுப்ரமணிய பாரதி
பொறுப்பு ஆசிரியர் : N. மூர்த்தி
சிறப்பாசிரியர் : M. வேடியப்பன்,
துணை ஆசிரியர் : சிவயோகி மவுரியன்
கௌரவ ஆசிரியர்கள் : குரு அரங்கதுரை, ISR செல்வகுமார்
உதவி ஆசிரியர்கள் : V. கார்த்தி குமார்
தலைமை நிருபர்கள் : பாலமுரளிவர்மன், மா.விஜயராகவன், ஸ்ரீகாந்த் வாஞ்சிநாதன்
நிருபர் : தங்கமித்ரன்
வடிவமைப்பு : M.கண்ணன்

தொடர்புக்கு :
Website: Thiraimozhi.com
Email : info@thiraimozhi.com
thiraimozhinews@gmail.com
9500074478 | 9566153766

# இந்தியாவின் எடிசன் G.D.N.

1893 இல் கோவையில் பிறந்த கோபால்சாமி துரைசாமி நாயுடு அவர்களின் வாழ்க்கை சரிதம்.

"இந்தியாவின் எடிசன்" என்றழைக்கப்பட்டவர்.

தனி மனித ஊக்கம் கொண்டு, புதிது புதிதாக பல எந்திரங்களை படைப்புகளை கண்டு பிடித்து கொண்டு செல்லும் அவர் தன் வாழ்க்கையில் சுதந்திர இந்தியாவிற்கு முன்னும் பின்னும் சந்தித்த சவால்களையும், தோல்விகளையும் காட்சி படுத்தி உள்ளார்கள்.

வியக்க வைக்கும் அவரின் வாழ்க்கை என்றைக்கும் ஒரு பாடம்.

ஆங்கிலேயர் காலத்தில் அவர் செய்த சாதனைகள், ஹிட்லருடன் அவரது சந்திப்பு, இந்தியாவில் அதுவும் கோவையில் ஜெர்மன் தொழில் நுட்பத்தில் Benz car உற்பத்தி தொழிற்சாலை ஒப்பந்தம், இந்தியாவிலேயே தயாராகும் இரண்டு பேர் அமர கூடிய விலை மலிவான கார் என ஒவ்வொன்றும் மலைக்க வைக்கிறது. "யுனைட்டட் மோட்டார் சர்வீஸ்" நிறுவனம் ஆரம்பித்த கதை, அதிலும் இன்றைய சென்னை போன்ற பெரு நகரங்களில் இன்றைய "hop in" நடைமுறையை அன்றே அவர் நடைமுறை படுத்தியது, அதுவும் நான்கு நாட்கள் வரை கோவை to கன்னியாகுமரி வரை ஒரே டிக்கெட் இல் எங்கு வேண்டுமானாலும் இறங்கலாம்; மீண்டும் ஏறிக்கொள்ளலாம் போன்ற மக்கள் நலம் சார்ந்த விஷயங்களை செய்து காட்டியது பிரமிப்பு.

**சரியில்லாத சாலைக்கு வரி கட்ட மாட்டேன் என்று முழங்கி ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்க்கிறார். அதுவே அவரின் சரிவுக்கு காரணமாக அமைகிறது.**

ஒரு இந்திய தொழில் முனைவோர் அன்று பட்ட சிரமங்கள் நமது நாட்டின் நல்ல பல வாய்ப்புகளை இழந்து விட்டோமோ என்ற ஏமாற்றம் மேலோங்குகிறது.

மேலும் தனி உடைமை என்ற கொடுமையான பார்வைக்கு இவர் போன்றவர்களை பலி கொடுத்து விட்டோமோ என பதறுகிறது.

எது எப்படியாயினும் ஒரே வருடத்தில் தான் சேர்த்த சொத்துக்கள் அனைத்தும் இழந்து நொடித்து போன நிலையிலும் தன்னுடன் சரி சமமாக அமர்ந்து உண்ட வெள்ளைக்கார அதிகாரியிடமே சென்று தனது செழிப்பான காலத்தை ஒருகணம் நினைவில் இருந்து உதறி தள்ளி விட்டு, இடுப்பில் பவ்யமாக துண்டை கட்டிக்கொண்டு, கை கட்டி " உங்க தொழிற்சாலையில் ஒரு "பிட்டர்" வேலை காலி என்று கேள்விப்பட்டேன். அந்த வேலை எனக்கு போட்டு தருவீர்களா?" என பணிவாக கேட்கும் போது மிக பெரிய மனிதராக விஸ்வரூபம் எடுக்கிறார்.




அந்த குணத்தை மனதில் கொண்டு அந்த வெள்ளைக்கார அதிகாரி," நீங்க என் நண்பர். அந்த வேலை வேண்டாம். என்னிடம் ஒரு பஸ் இருக்கிறது. அதை வேண்டுமானால் எடுத்து கொண்டு ஓட்டுங்கள். பின்னர் அதற்கு உண்டான தொகையை செலுத்தினால் போதும்" என தோள் கொடுக்கிறார். அந்த பஸ் ஓட்டுநராக அவரே செயல்பட, பின்னர் ஒன்று இரண்டாகி இருநூறாகி நானூறாகி மீண்டும் வாழ்வின் உச்சத்தை அடைகிறார். ஒரு மனிதர் மட்டுமே இருந்தாலும் பேருந்து குறித்த நேரத்தில் புறப்பட வேண்டும், சென்று சேர வேண்டும் என தன் மேலாளருக்கு அறிவுறுத்துகிறார். அத்தனை பேருந்துகளை பராமரிக்க சொந்தமாக பட்டறை உருவாக்குகிறார். சமானியருக்கு பயன்படும் வகையில் மிக மலிவாக மக்களை பயணிக்க வைக்கிறார். பல தொழிற்சாலைகளை நிறுவி கோவையை ஒரு தொழிற்பேட்டையாக உருவாக்குகிறார். அதன் தாக்கம் அவரை போல பலரும் "டிவிஎஸ்" போன்றவர்கள் இதர பகுதியில் தழைக்கின்றனர்.

சரியில்லாத சாலைக்கு வரி கட்ட மாட்டேன் என்று முழங்கி ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்க்கிறார். அதுவே அவரின் சரிவுக்கு காரணமாக அமைகிறது. பல வழிகளில் இன்று நம்மை யோசனை செய்ய வைக்கிறார். என்ன காரணம்? ஒரு சர் சி வி ராமன், உலகே நடுங்கும் ஹிட்லர், அண்ணல் காந்தி, தந்தை பெரியார் போன்ற பல நபர்களிடம் நல்ல சகவாசம் கொண்ட ஒரு மனிதரை எப்படி தவற விட்டோம் என வருந்துகிறது.

சில விடைகள் கிடைத்தாலும், அது சான்றின்றி ஒரு ஊகமாக அமையலாம்.

அதில் மேலோங்கி நிற்பது, அவர் ஹிட்லருடன் நின்று அவர்களின் Benz தொழிற்சாலை கோவையில் அமைக்க டெண்டர் வாங்கி வந்தார்... வட நாடு மற்றும் பிற தேசங்கள் அவருக்கு சதி செய்தன... ஆங்கிலேயரின் கோபத்திற்கு ஆளானார். அவரே பின்னர் அந்த தொழிற்சாலையை இந்தியாவில் வேறு யாருக்கு கொடுக்கலாம் என Benz நிறுவனம் அவரிடம் கேட்கும் போது "டாடா" நிறுவனத்தை பரிந்துரை செய்கிறார். GEEDEE BENZ, TATA BENZ ஆக உருவெடுக்கிறது.

அவர் ஒரு நாத்திகர். தந்தை பெரியாரோடு சேர்ந்து சமூக நீதி பேசி நீதிக்கட்சியில் இருந்தார். அன்றைய காங்கிரஸ் அவரை கண்டுகொள்ள வில்லை.

தனி மனித உடைமைகள் எல்லாம் கொடுமை என சாடிய "தோழர்கள்" தமக்கு அவர் அளித்த வாழ்வினை மறந்தார்கள்.

கள்ள நோட்டு அடித்தார் என அவரை அழித்தார்கள் சோரம் போன வருமான வரித்துறை அதிகாரிகள் சிலர்.

அவருக்கு அபயமில்லை.

நாடு ஒரு நல்ல மனிதரை தவற விட்டது என்பது மட்டும் உண்மை.

உழைப்பும் தன்னம்பிக்கையும் மூலதனமாக கொண்டு பல அசாத்தியமான காரியங்களை விவசாயம் முதல் ஆடை நெய்தல் வரை ஒன்று விடாமல் வியத்தகு வகையில் செய்து காட்டியுள்ளார்.

படத்தில் மாதவன் அவரை கண் முன் கொண்டு வந்து நிறுத்துகிறார். விறு விறுவென படத்தை கொண்டு செல்கிறார்கள். ஜெர்மனியின் காட்சிகள் பழைய ஆவணங்களில் இருந்து பயன்படுத்தி இருந்தாலும் மலைக்க வைக்கிறது. கடைசியில் அவரின் விளக்கங்கள் சர்ச்சை உண்டாக்கலாம்.

அவர் காலத்திற்கு பின் எது நிலைக்குமோ இல்லையோ அவரின் சாதனைகள், செய்முறை அறிவு திறன், தன்னம்பிக்கை. வாழ்வியல் அனைவரும் அறிய வேண்டிய பாடம். "இந்தியாவின் எடிசன்" என கொண்டாடினாலும் அவர் படைப்புகளை பெரு உற்பத்தி செய்து மக்களிடம் சேர்க்க தவறியதற்கு நாட்டின் "அனுமதி சட்டங்கள்" அவரை போன்றோருக்கு சாதகமில்லாமல் சாபமாகவே இருந்தது நிதர்சனம்.

படத்தை மேலும் செம்மையாக கொண்டு வர நிறைய வாய்ப்புகள் இருந்தாலும் இதுவரை கொண்டு வந்ததே பெரிய முயற்சி. அதை பாராட்ட வேண்டும். கண்டிப்பாக நம் இளைய தலைமுறை படம் பார்க்க வேண்டும். வருமான வரி விலக்கு அவரது படத்துக்காவது கொடுக்கலாம். நன்றி செய்ய மீண்டும் ஒரு வாய்ப்பு. எந்த சாயமும் பூசாமல் படத்தை வழங்கிய படக்குழுவை கண்டிப்பாக மெச்சி கொள்ளலாம். ஜி டி என் நாம் தவற விட்ட ஒரு நவரத்தினம்.

**- கிருஷ்ணன் இரவிஷங்கர்**

# இயக்குநர்கள் சங்கத்தில் AI பயிற்சி



தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்க உறுப்பினர்கள் புதிய தொழில் நுட்பங்களை தெரிந்து கொள்ளும் வகையில் AI தொழில்நுட்பம் பற்றி தெரிந்து கொள்ள பதிவு செய்த 98 உறுப்பினர்களுக்கு 19.09.2026 (சனிக்கிழமை) இயக்குநர்கள் சங்க திரையரங்கில் AI தொழில் நுட்ப வல்லுநர்கள் மூலம் காலையில் ஒரு Batch மதியம் ஒரு Batch என இரண்டு சிறப்பு வகுப்புகள் நடத்தப்பட்டது. பதிவு செய்த உறுப்பினர்கள் ஆர்வமுடன் பங்கேற்றனர்.

உறுப்பினர்கள் AI வகுப்பு பயனுள்ளதாக அமைந்ததாகவும், வல்லுநர்களிடம் கேட்ட கேள்விகளுக்கு சிறப்பான விளக்கம் கிடைத்ததாகவும் தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் தென்னிந்திய திரைப்பட தொழிலாளர்கள் சம்மேளன தலைவர் மற்றும் தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்க தலைவர்ஆர்/கே. செல்வமணி, பொதுச்செயலாளர் ஆர்.வி.உதயகுமார், பொருளாளர் பேரரசு, இணைச்செயலாளர் எஸ்.எழில், திரு. என்.ஏகம்பவாணன், செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.கே.கண்ணன், முத்துவடுகு, சாய் ராம்கி, அசோக் அண்ணாமலை, தி.ரமேஷ் பிரபாகரன், இந்திரா கிளாரா, ஆர்.சுப்ரமணிய பாரதி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்த வகுப்பை *Muonium AI Studios* என்ற நிறுவனத்தின் CEO திரு. செந்தில் நாயகம் அவர்கள் மற்றும் அவர்களது அணியினருக்கு சங்கத்தின் சார்பில் பொன்னாடை மற்றும் கேடயம் வழங்கி சிறப்பிக்கப் பட்டனர்.




**மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் திரு ராஜ்மோகன் அவர்களின் கரங்களால் நி.ச. தேவகுமாரன் பட்டதாரி தலைமை ஆசிரியர், (ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, கூடலூர், காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், செங்கற்பட்டு மாவட்டம்.) நல்லாசிரியர் விருது பெற்றபோது.**

தான் பணியாற்றிய பள்ளியில் மாணவர் சேர்க்கையை உயர்த்தியதற்காகவும் பள்ளியின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தியதற்காகவும் கற்பித்தலில் சில புதுமைகள் புகுத்தியதற்காகவும் மாணவர்களின் உயர்கல்விக்கு வழிகாட்டியதற்காகவும் வள்ளுவத்தின் பெருமையை பறைசாற்றும் விதமாக மாற்றுச் சிந்தனையில் மெய்வேல் பறியா என்ற நூலை எழுதியதற்காகவும் இவற்றையெல்லாம் ஆராய்ந்து தமிழக அரசின் டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது இவ்வாண்டு இவருக்கு வழங்கப் பட்டுள்ளது.

மேலும் 2026ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசின் மாநில நல்லாசிரியர் (டாக்டர் ராதாகிருஷ்ணன்) விருது பெற்ற 396 ஆசிரியர்களுக்கும் திரைமொழி மாத இதழ் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.




**மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் திரு ராஜ்மோகன் அவர்களின் கரங்களால் சா.சத்தியவதி தலைமையாசிரியர் (ஊராட்சி ஒன்றிய தொடக்கபள்ளி மாதிரி ஒலக்கூர் ஒன்றியம் விழுப்புரம் மாவட்டம்) நல்லாசிரியர் விருது பெற்றபோது.**

தான் பணியாற்றிய பள்ளியில் புதிய தொழில்நுட்பத்துடன் கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள், கிராமப்புற பெண் குழந்தைகள் கல்வி திறன் மேம்பாட்டிற்கான விருது, பள்ளி மேலாண்மைக்குழு மூலம் பள்ளி உட்கட்டமைப்பு மேம்படுத்துதல், மாணவர்களுக்கு PHONIC மூலம் ஆங்கிலம் கற்பித்தல், மாணவர் சேர்க்கையை உயர்த்துதல், கொரான வெள்ளம் போன்ற இயற்கை இடர்பாடுகளின்போது மாணவர்கள் நன்கொடை சேகரித்து வழங்குதல், பெண்கல்விக்கான மாவட்ட விருது, சிறந்த பள்ளிக்கான மாநில விருது, இயக்குனர்கள் உட்பட கல்வி அதிகாரிகள் மாணவர்களின் கற்றல் கற்பித்தலை பாராட்டிய நிகழ்வு போன்ற மேற்கண்ட செயல்பாடுகளைப் பாராட்டி 2026ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

# பாக்யராஜ் ஒரு சகாப்தம் - 3






பாக்யராஜ் ஒரு வற்றாத சுனையருவி. அவர் அறிந்திருக்கிற ஞானத்தை உதவி இயக்குநர்களுக்கு அள்ளிஅள்ளி வழங்க அவர் ஒருபோதும் தயங்கியதில்லை. அவர் ஒரு நிறைகுடம். வேட்டிய மடிச்சி கட்டு படப்பிடிப்பின் போது, அவர் எனக்கு ஒற்றை கையில் கிளாப் அடிக்க கற்றுக்கொடுத்த தருணம் எனக்குள் அட போட வைத்த பல தருணங்களில் ஒன்று. அவர் இருக்கிற வசதிகளை வைத்துக் கொண்டு, பார்வையாளர்களை நம்ப வைக்கிற விதத்தில் காட்சிகளை எடுப்பதில் வல்லவர். இடையில் சினிமா துறையில் வேலை நிறுத்தம் ஏற்பட்டபோது, இரண்டு டெலிஃபில்ம்கள் உருவாக்கி னார். நீங்க நெனச்சா சாதிக்கலாங்க, ரூல்ஸ் ரங்காச்சாரி.

நீங்க நெனச்சா சாதிக்கலாங்க கதையின் இறுதியில் சிவன், பார்வதியையே அநாயாசமாக கலாய்த்திருப்பார். அது கடவுளாகவே இருந்தாலும், அனைவருக்கும் காமம் இயல்பானது என்பதை அந்த காட்சியில் உணர்த்தியிருப்பார். ரூல்ஸ் ரங்காச்சாரியில் வருகிற ரங்காச்சாரி மற்றும் பாக்யராஜ் சார் கதாபாத்திரங்களை வைத்துக்கொண்டு இப்போதும் நவீனமயமாக ஒரு விறுவிறுப்பான நகைச்சுவை படம் உருவாக்க முடியும். அந்த கதாபாத்திரங்கள் அத்தனை வலுவானவை. காலம் கடந்தும் நிற்க தக்கவை.

டி.டி. தொலைக்காட்சிக்கு ஒரு தொடர் எழுதிக் கொடுத்தார். அதன் இறுதிக்காட்சி முக்கியமானது. அதற்கான விவாதத்தில் ஒரு ஐடியா சொன்னேன். கதைப்படி நாயகி மிகுந்த சிரமப்பட்டு ஒரு கல்யாணத்தை முன்னின்று நடத்துவார். அன்று கல்யாண நாள். அப்போது பார்த்து ஒரு அதிர்ச்சியான தகவல் வரும். அவளுடைய கணவன் இறந்த சேதி தான் அது. ஆனாலும், அவள் அந்த துக்க செய்தியை திருமணம் முடிகிற வரை மறைத்து, நடித்து, சிரமப்பட்டு, எப்படி அந்த திருமணத்தை நடத்திக் காட்டுகிறாள் என்பது தான் அந்த ஐடியா.

வேட்டிய மடிச்சு கட்டு படத்தில் நாயகன் பயந்த சுபாவம் உள்ளவன். தன் மகனின் மனதிலோ, தானொரு வீராதி வீரன் என்கிற பிம்பத்தை விதைத்து வைத்திருப்பான். அவனுக்கு தன்னுடைய மகனாவது தைரியசாலியாக வளர வேண்டும் என்பது விருப்பம். இறுதியில் மகனை காப்பாற்றுவதற்காக நாயகன் உண்மையாகவே தைரியசாலியாக மாறுவதாக திரைக்கதை அமைக்கப் பட்டிருந்தது. அந்த படத்தில்தான் சோனு என்கிற சாந்தனு நாயகனின் மகனாக அறிமுகமானது.

படப்பிடிப்பு இடை வேளையில் எனக்கு ஒரு யோசனை தோன்றியது. திரைக்கதையில் ஒரு சிறிய மாற்றம் செய்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது. அதன் மூலம், சோனுவை அறிமுகப்படுத்துகிற அந்தப் படம் ஒரு முத்தாய்ப்பான படைப்பாக மாறவும் வாய்ப்பிருப்பதாக தோன்றியது. நான் சொன்னது இது தான். சோனுவிற்கு ஒரு கட்டத்தில் தன்னுடைய அப்பா ஒரு பயந்தாங்கொள்ளி என்பது தெரிந்து விடுகிறது. இந்த விசயம் நாயகனாகிய அப்பா கதாபாத்திரத்திற்கு தெரியாது. அதன் பிறகு மகன் கதாபாத்திரம் திட்டமிட்ட பல பிரச்னைகளை உருவாக்குகிறான். அதில் தன்னுடைய அப்பாவை சம்பந்தப்படுத்தி வைக்கிறான். காரணம், எப்படி அந்த அப்பா கதாபாத்திரம் மகனை ஒரு தைரியசாலியாக வளர்க்க விரும்புகிறதோ, அதே மாதிரி, தன்னுடைய அப்பாவை ஒரு தைரியசாலி யாக மாற்ற மகன் கதாபாத்திரம் விரும்புகிறது. இறுதியில் மகனின் அந்த சூட்சுமத்திற்கு ஆட்பட்டு, தந்தை கதாபாத்திரம் உண்மையாகவே தைரியசாலியாக மாற வேண்டிய நிர்பந்தம் வருகிறது.

சாது மிரள்கிறது. காடு அதகளப்படுகிறது. கடைசிவரை தன் மகனுக்கு தன்னைப்பற்றி எதுவுமே தெரியாதென தந்தை கதாபாத்திரம் எண்ணிக்கொண்டு, தான் துவக்கத்தி லிருந்து இப்போது வரை எப்படியெல்லாம் தைரியசாலியாக இருந்திருக்கிறேன் என்று தன்னுடைய கற்பனையில் விரியும் வீரதீர பிரதாபங்களை மகனிடம் அள்ளிவிட, மகன் அவரைப்பற்றி எல்லாமே தெரிந்திருந்தும், தெரியாதது போல, பிரமித்துப்போகிறவனாய் பாவித்துக் கொண்டே, அப்பாவோடு நடந்து செல்வதோடு, படம் நிறைவடைவதாக, அந்த வெர்ஷனை சொன்னேன். கடைசி நேரத்தில் அதை எடுக்க முடியா விட்டாலும், அப்படியாக என்னை யோசிக்க வைத்தது அவருடைய திரைக்கதை சாலையில் கற்றுக்கொண்ட பாடங்களே. அதுவே எனதான கலைப்பயணத்தின் அசைக்க முடியாத அஸ்திவாரம்.

அவர் கே.எஸ்.கோபாலகிருஷ்ணன் தாக்கத்தில் தன்னை வார்த்தெடுத்துக் கொண்டவர். மேலும், அவரின் முக்கியமான படங்களுக்கு திரைக்கதை விவாதங்களில் ஜிபிஆர் என்கிற பாலசுப்பிரமணியன் கலந்து கொள்வார். அவர் தான் பாசமலர், ஆலயமணி, அன்னை இல்லம், களங்கரை விளக்கம், தாழம்பூ, ரகசிய போலீஸ் 115, தீர்க்க சுமங்கலி, அவன் தான் மனிதன் போன்ற பல படங்களுக்கு திரைக்கதை அமைத்தவர். ஒரு கை ஓசையின் ஐடியாவை கேட்டுவிட்டு, அதன் சாரத்தை இரண்டே வரிகளில் இப்படி சொல்லியிருக்கிறார். 'அவன் பேச முடியாதபோது காதலை சொல்ல வாயில்லையே என்று துடிக்கிறான். பேச்சு வந்த பிறகு, காதலை இனி எப்போதும் பேச்சில் தெரிவிக்க முடியாதவனாகி விடுகிறான்.'

**'அவன் பேச முடியாதபோது காதலை சொல்ல வாயில்லையே என்று துடிக்கிறான். பேச்சு வந்த பிறகு, காதலை இனி எப்போதும் பேச்சில் தெரிவிக்க முடியாதவனாகி விடுகிறான்.'**

அவர் படத்தொகுப்பு பணியில் அதிக ஈடுபாடு காட்டுவார். மூவியோலா முன் அமர்ந்து, எடிட்டிங் பணிகளை கையாளுகிறபோது, நாங்கள் உதவியாளர்கள் அனைவரும் அவரைச் சுற்றி நின்றுகொண்டு, நேரம் மறந்து அவரின் சிந்தனைகளை பின்தொடர்வோம்.

அதன் பிறகு வரும் போஸ்ட் புரடக்சன் என்கிற பணிகளில் அவர் பெரிதாக ஈடுபடுவதில்லை. உதவி இயக்குநர்களிடம் விவரம் சொல்லிவிட்டு, அவர்களையே பார்த்துக்கொள்ளச் சொல்வார். அப்படி முதல் படத்திலேயே டப்பிங், எஃபக்ட்ஸ் போடுதல் போன்ற பணிகளை செய்தது மறக்க முடியாதது. எஃபெக்ட் போடும்போது, ஞானப்பழம் படத்திற்கு ஒரு கோயில் காட்சியில் சுகன்யா, ரேகாவின் குரல் தான் பாக்யராஜை மறுமணம் செய்து கொள்ளப்போவதாக சொல்கிற சேதியை கேட்டு அதிர்ச்சியடைவார். அப்போது சுகன்யா குளோஸ் அப் மீது ஓங்கி ஒலிக்கிற கோயில் மணி ஓசையை ஓவர்லேப் செய்தேன். அதை சார் ரசித்தார்.

இரவு படப்பிடிப்பின் போது, தூக்கத்தை போக்குவதற்காக, ஷாட் இடைவெளியின் போது, சில டங் டிவிஸ்டர்களை சொல்லி, துணை கதாபாத்திரங்களை அதே மாதிரி சொல்லச்சொல்லி, அந்த சூழலை கலகலப்பாக்குவார். அவரிடம் அடிக்கடி சொல்லுவேன். உங்களுக்கே உங்கள் திறமை தெரியாது சார். நீங்கள் மட்டும் நடிக்காமல் ஒரு திரைக்கதையாளராக மட்டும் இருந்திருந்தால், உலகின் ஆகச்சிறந்த திரைக்கதைகளை பல பண்பட்ட நடிகர்களுக்கு எழுதித்தந்திருப்பீர்கள் என்பேன்.

இந்திய திரைக்கதையின் தந்தை என்று பெயரெடுத்த பாக்யராஜ் சார் எழுதிய 'வாங்க சினிமா பத்தி பேசலாம்' நூல் நான் படித்த திரைக்கதை நூல்களிலேயே ஆகச்சிறந்த நூல் என்பேன். எளிமையானது. ஆழமானது. சிட்ஃபீல்ட் போன்ற உலகின் சிறந்த திரைக்கதை கலை குறித்த நூல்களை எழுதியவர்களின் நூல்களை படித்திருக்கிறேன். உண்மையில், அவருடைய இந்த நூல் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருந்தால், அவர்களுக்கும் ஒரு படி மேல போய் நின்றிருப்பார். உலக திரைக்கதையின் தந்தை என்று போற்றப்பட்டிருந்திருப்பார் என்பதில் எந்த சந்தேகமுமில்லை.

**குலசேகர்**

Owned, Published, and Printed by **R.SUBRAMANIYA BHARATHI.** Printed at **CHENNAI OFFSET PRINTERS**, No, 19/1, 21/2, Kithabath Khan Bahadhur Street, Ellies Road, Chennai- 600 002 and Published from No. 41/14, F3, Loganathan Nagar, 2 nd Street, Choolaimedu, Chennai-600 094. **Editor: R.SUBRAMANIYA BHARATHI**. Mobile: **9566153766, E-mail: thiraimozhinews@gmail.com**